# இலங்கை மத்திய வங்கி

## வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

**2020 யூலை 21 அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் 2020இன் 04ஆம் இலக்கம்**

---

**2020ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான திருத்தங்கள்**

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் தொகுக்கப்படுகின்றன என்பதனையும் இங்கேயுள்ள அதற்கான பதிலிறுப்புக்கள், கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பான எதிர்கால ஒழுங்குவிதிகள் அத்துடன்/ அல்லது திருத்தங்களினை அடிப்படையான மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவற்றிற்குட்பட்டனவாகவிருக்கும்.

**அடிக்கடி கேட்கப்படும் கேள்வி இலக்கம்: 20இற்கான திருத்தப்பட்ட பதிலிறுப்பு**

**சலுகை/ சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வட்டிக் கூற்றிற்கு என்ன நடக்கும்?**

- சட்ட இசைவுத் தாமதம் முடிவடையும் வரை தவணைப் பணக் கொடுப்பனவுகள் (வட்டி + மூலதனம்) தேவைப்படமாட்டாது. சட்ட இசைவுத் தாமதக் காலம் முடிவடைந்ததும் வழங்கப்பட்ட சலுகைகள் முடிவடைவதற்கு முன்னதாக இணங்கிக் கொள்ளப்பட்டவாறு வாடிக்கையாளர்கள் கொடுப்பனவுகளைச் செய்ய ஆரம்பித்தல் வேண்டும்.
- எனினும், உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பான படுகடனின் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வைப்புக்கள்/ கடன்பாடுகள் தொடர்பான வட்டிச் செலவுகள் தொடர்பில் தமது கரிசனைகளை எழுப்பியிருப்பதுடன் இது தொடர்பில் உயர் அதிகாரிகளுடன் சந்திப்புக்களையும் மேற்கொண்டிருந்தன. அத்தகைய சந்திப்புக்களினது பெறுபேறுகளையும் அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களினதும் அடிப்படையில் வங்கிகள், தவணைக் கடன்களின் பிற்போடப்பட்ட கட்டுப்பணங்களின் மீது மேலதிக வட்டியினைப் பின்வரும் விதத்தில் விதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன.
  - ரூபாவில் வழங்கப்பட்ட சமமான மாதாந்த தவணைக் கடன்கள் தொடர்பில் பிற்போடப்பட்ட தவணைப் பணம் மீது மேலதிக வட்டியாக ஆண்டிற்கு 7 சதவீதம் வரையான வட்டி
  - மேற்குறிப்பிடப்பட்ட வட்டியானது கடனின் நீடிக்கப்பட்ட எஞ்சிய காலப்பகுதியின் இறுதியில் அறவிடப்படுதல் வேண்டும். வங்கிகள் இவ்வட்டியை சட்ட இசைவுத் தாமத காலப்பகுதி முடிவடைந்தவுடன் உடனடியாக அறவிடக்கூடாது.
  - ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட மற்றொரு வகையான வசதிகளைப் பொறுத்தவரை பிற்போடப்பட்ட தவணைக் கட்டுப்பணத்திற்கான சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களின் மீது வங்கிகளும் கடன்பாட்டாளர்களும் இணங்கிக் கொள்வது அவசியமாகும்.
- பொதுப் போக்குவரத்துப் பணிகளை வழங்குகின்ற பேருந்துகளுக்காக வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் தொடர்பில் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதிக்கான மேலதிக வட்டியாக ஆண்டிற்கு உயர்ந்தபட்சம் 4 சதவீதத்தினை உரிமம்பெற்ற வங்கிகள் விதிக்கலாம் என்பதுடன் அத்தகைய தொகையினை இரண்டாண்டு காலப்பகுதியில் சமமான தவணைக் கட்டுப்பணமாக அல்லது குத்தகை வசதியின் எஞ்சிய காலப்பகுதியில் அறவிட்டுக் கொள்ளலாம். இது 2020 ஒத்தோபர் 01 இலிருந்து ஆரம்பமாகும்.

**புதிய அடிக்கடி கேட்கப்படும் கேள்வி இல. 45**

நான் சுற்றுலா தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதுடன் நான் ஊர்திக் குத்தகை வசதியையும் பெற்றிருக்கிறேன். தற்போதைய 6 மாத சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியை எனக்கும் தரக்கூடிய சாத்தியங்கள் உள்ளனவா?

- ♦ கொவிட்-19 தொற்று சுற்றுலாத் துறை வியாபாரங்களின் மீதும் தனிப்பட்டவர்களின் மீதும் கொண்டிருக்கக்கூடிய மோசமான தாக்கத்தின் சாத்தியத்தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி, தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்குப் பின்வரும் நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பனவற்றினை (இதனகத்துப் பின்னர் நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொண்டது.

  - ➢ சுற்றுலாவுடன் தொடர்பான ஊர்திகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகளின் வெளிநின்ற மூலதனத்தினைப் பொறுத்தவரை தற்போதுள்ள 6 மாத கால சட்ட இசைவுத் தாமத காலப்பகுதி ஏற்கனவே 12 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

  - ➢ எனினும், கடன்பாட்டாளர்கள் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வட்டியைக் கொடுப்பனவு செய்வது அவசியமாகும். கடன்பாட்டாளர்களுக்கு வசதியீனங்களை ஏற்படுத்தாததொரு முறையில் அத்தகைய வட்டியை அறவிட்டுக் கொள்ளுமாறு நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

  - ➢ சுற்றுலா தொடர்பான ஊர்திகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகளைப் பொறுத்தவரை ஒன்றுசேர்ந்த தண்ட வட்டியைத் தள்ளுபடி செய்தல்.

**--------------இவ்வடிக்கடி கேட்டுக் கொள்ளப்படும் கேள்விகள் 2020.07.21 அன்று இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டன------**